திட நம்பிக்கை திண்ணமாக இருத்தல் வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த பொன்மொழிக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் பயணம் சென்று கொண்டிருக்கின்றது. இந்த குறுகிய காலத்திலே தேர்தலைச் சந்தித்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அவைக்கு வந்து, மீண்டும் முதலமைச்சராகவே பதவியேற்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, அவருக்கும், இந்த மாமன்ற உறுப்பினர்கள் பலர், இந்த அவையில், ஐந்து ஆண்டுகளில் என்னோடு தோளோடு தோள் நின்று சிறப்பாகப் பணியாற்றிய அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு சமயம் துரியோதனனிடம், மரத்தில் இருந்த கிளியைக் குறி வைக்கச் சொன்னார் துரோணர். "என்ன தெரிகிறது?" என்று கேட்டார். "மரக்கிளை தெரிகிறது" என்றான் பின்னர் "கிளி தெரிகிறது" என்றான், துரியோதனன். தூரத்தில் இருந்த அர்ச்சுனனை அழைத்தார் துரோணர். அர்ச்சுனரிடம் "என்ன தெரிகிறது?" என்று கேட்டார். "கிளியின் கழுத்து மட்டும்தான் தெரிகிறது" என்று பதிலளித்தான் அர்ச்சுனன். அர்ச்சுனனைப் போல வெற்றி என்ற இலக்கை நோக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகளானாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும்" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதற்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இரண்டாவது உலகப் போரில் வெற்றி உறுதி என நினைத்த சர்ச்சில், 'V' என்றால் வெற்றி என்ற குறியீட்டை அனைவரின் மனங்களிலும் பதிய வைத்தார். அவர் நினைத்தது நனவானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் செல்கின்ற இடங்களிலெல்லாம் 'V' என்ற இரட்டை விரல் குறியீட்டினைக் காட்டி, பிரச்சாரம் செய்து வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் நினைத்தது நிறைவேறும் எனத் தெரிவித்து, அனைத்து உறுப்பினர்களுக்கும்